| | | | |
|---|---|---|---|
| **Client** | VMU | | |
| **Publication** | India Today | | |
| **Supplement** | | | |
| **Edition** | Chennai | | |
| **Date** | 28.12.11 | | |
| **Page No** | 42 & 43 | | |
| **Headline** | " Business Ethics also a lesson " | | |
| **Height** | 7 | **Width** | 28 |

எக்ஸ்பிரஸ் பேட்டி

எஸ்.வாசுதேவன்

# " தொழில் தர்மமும் ஒரு பாடம் "

*அறுபடை வீடு இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜியின் மேலாண்மைத்துறைத் தலைவர் வாசுதேவனுடன் ஒரு எக்ஸ்பிரஸ் பேட்டி:*

**கே. எஸ்.பி.ஜெயின், ஜம்னாலால் பஜாஜ், நர்ஸீ மாஞ்சி தரத்திலான கல்வி நிறுவனங்கள் இங்கு வந்துவிட்டனவா?**

ப. நிச்சயமாக. நீங்கள் கூறிய நிறுவனங்கள் எல்லாம் மும்பையில் நூற்றுத் தொழில் உச்சத்தில் இருந்தபோது தொடங்கப்பட்டவை. அவற்றின் நீண்ட நெடிய பாரம்பரியம் காரணமாக அவை இன்றளவும் அறியப்படுகின்றன. அதே நேரத்தில் இன்று தமிழகத்தில் பிம், கிரேட் லேக்ஸ், லிபா முதலான தேசிய புகழ் பெற்ற மேலாண்மைக் கல்வி நிறுவனங்கள் உருவாகியிருக்கின்றன. அடுத்ததாக ஐஐஎம்கூட வந்துவிட்டது.



**கே. எஸ்.சி.எம்.எஸ், மைகா போன்ற ஒரு துறை சார்ந்த பி-ஸ்கூல்கள் இன்னும் வரவில்லையே?**

ப: அதற்கான காலம் வந்துவிட்டது. அடுத்தடுத்து துறைசார் மேலாண்மைக் கல்வி நிறுவனங்கள் இங்கு வந்துவிடும்.

**கே. வணிக மேலாண்மைப் பள்ளிகளில் நிர்வாகம் மட்டும் தான் கற்றுத்தரப்படுகிறதா?**

ப: நிர்வாகம் தவிர தொழில் தர்மம் என்பதை ஒரு பாடமாகவே இப்போதெல்லாம் கற்றுத் தரத் துவங்கியிருக்கிறார்கள்.

**கே. பி-ஸ்கூல்கள் தொழில் முனைவோரை உருவாக்குவதில்லை என்கிறார்களே?**

ப: முன்பெல்லாம் நிரந்தர வேலை என்பதே நம்மவர்களின் கனவாக இருந்ததுதான் காரணம். இன்று நிலைமை மாறுவதால் தொழில் முனைவோரும் உருவாகிறார்கள்.

**கே. உங்கள் மாணவர்களுக்கு எவ்வளவு சம்பளம் கிடைக்கிறது?**

ப: மாதம் சுமார் ரூ.35,000.